தேசிய ஆராய்ச்சி சபை - 2021

.............................................

1. நிதிக்கூற்றுக்கள்

..................................

1.1 அபிப்பிராயம்

.....................................

தேசிய ஆராய்ச்சி சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் 2021 செப்தம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் கூட்டும் வகையில் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

.................................................

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது். எது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொறுத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினரின் பொறுப்பு

..............................................................................................................................................

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

..................................................................................................................................

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிரழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க கூட்டுத்தாபனம் செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்
....................................................................................................................................

1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு
..................................................................................................

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப்பு பொறுப்பினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல் பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப்பு பொறுப்பினை பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்தலினை பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை சபையினால் பேணுதல் அத்தியவசியமானதாகும்.

2. நிதி மீளாய்வு
.....................

2.1 நிதி விளைவுகள்
...........................

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 960,252 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 3,295,913 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 4,256,165 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு
................................

3.1 செயற்பாட்டு செயற்திறனின்மை
...................................................

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | .................................. | ............................ | ........................... |
| (அ) | இலக்கினை அடிப்படையாகக் கொண்ட பல் விடயம் சார்ந்த ஆராச்சிகள் 05 ஆண்டுகளுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 05 செயற்திட்டங்களுக்கு மத்தியில் 4 ஆராய்ச்சிகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. இலங்கையில் பாம்புக் கடிக்கான பல்கலவை விச எதிர்ப்பு வகையை மேம்படுத்தும் ஆராய்ச்சி 07 ஆண்டுகளை மிகைத்திருந்தும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | வுழு 14-18 செயற்திட்டத்தின் ஆராச்சியாளர்கள் நாகப் பாம்பு, கட்டுரியன் புள்ளி விரியன், குணகடுவ, புள்ளி விரியன் போன்ற பாம்பு விசத்திற்காக தடுப்பு மருந்துகளைத் தயாரித்து வருவதுடன் அதில் முதலாவது கட்டளையானது நாகப்பாம்பு, புள்ளிவிரியன், குணகடுவா, மணல்விரியன் போன்ற பாம்பு விசத்திற்காக தயாரிக்கப்பட்டன. அதன் சிகிச்சையை பரீட்சாத்தம் பார்த்தலானது பேராதெனிய போதனா வைத்திசாலையில் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது. 2018 ஏப்ரல் 20 ஆந் திகதி வரையும் கட்டுரியன் விசத்தை சேகரிப்பதற்கு வன பாதுகாப்பு திணைக்களத்தினால் அங்கீகாரம் வழங்கப்படாமையே காட்டுரியன் பாம்பு இன்றி | செயற்திட்டத்தை பூர்த்தி செய்யவேண்டிய ஆண்டுகளின் எண்ணிக்கையினுள் உரிய செயற்திட்டத்தினைப் பூர்த்தி செய்யக்கூடியவாறு திட்டங்களைத் தயாரித்து செயற்திட்டங்களை ஆரம்பிக்க வேண்டியதுடன் உரிய காலப்பகுதிக்குள் செயற்திட்டத்தை முடிவுறுத்துவதற்கு முடியுமான வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தடுப்பு மருந்தினை தயாரிப்பதற்கு காரணமாகும். எவ்வாறாயினும் 5 பாம்பு விசங்களுக்காக தடுப்பு மருந்து தயாரிப்பினை மேற்கொள்ளுமாறு எங்களுக்கு பணிப்பாளர் சபை அறிவுறுத்தல் வழங்கியிருந்தது. 2018 ஏப்ரல் 20 ஆந் திகதி வழங்கிய அங்கீகாரத்தின் அடிப்படையில் பாம்பு விசங்கள் 2018 யூலை மாதம் 26 ஆந் திகதி கொஸ்டாரிகா அரசாங்கத்தின் ருளைநசளனையன னந ஊழளவய சுழை௨ய பல்கலைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் 2020 யூன் 26 ஆந் திகதி இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் தடுப்பு மருந்தினைப் பெற்றுக்கொள்வதற்காக 2020 யூலை 13 ஆந் திகதி ருளைநசளனையன னந ஊழளவய சுழை௨ந பல்கலைக் கழகத்திற்கு விசேட தரத்தின் கீழ் மிகவும் குறைந்த வெப்பத்தில் அந்த நாட்டிலிருந்து இந்த நாட்டிற்கு கூரியர் முறைமையினூடாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது.

எனினும் காணப்பட்ட கொரோனா நிலைமையின் அடிப்படையில் உலகத்தில்

| | | | |
|---|---|---|---|
| | | விமானப் பயணங்களை நிறுத்துவதன் அடிப்படையில் கூரியர் மூலம் அனுப்புவதற்கு முடியாது என தெரிவிக்கப்பட்டது. 2021 ஏப்ரல் 30 ஆந் திகதி எங்கள் நிறுவனத்தின் அங்கீகாரம் அப்பல்கலைக் கலகத்தினூடாக ஏனைய கூரியர் சேவைக்கு வழங்கி இலங்கைக்கு 2021 மே முதலாம் வாரத்தில் கிடைத்ததுடன் இதன் பின்னர் சிகிச்சை பரீட்ச்சாத்தம் பார்த்தலை மேற்கொள்ளுதல் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதற்காக சபை மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டது. மேலே குறிப்பிட்ட நியாயமான காரணத்தின் அடிப்படையில் எங்கள் பணிப்பாளர் சபையினால் செயற்திட்டத்தை நீடிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| (ஆ) | வுழ-14-04 ஆராய்ச்சி செயற்திட்டத்தின் மூலம் டெங்கு பரவுவதனைக் கட்டுப்படுத்துவதற்காக புதிய புழு இனம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தும் அப்புழுக்கள் நாட்டில் பரவுவதன் மூலம் இலங்கையில் டெங்குவை கட்டுப்படுத்தும் திட்டத்தை அமுல்ப்படுத்துதல் இடம்பெற்றதா என்பது தொடர்பான மேற்பார்வையானது தேசிய ஆராய்ச்சி சபையினால் மேற்கொள்வதும் அதற்காக பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் கவனம் | வுழ 14-04 செயற்திட்டம் சுகாதார அமைச்சின் டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவுடன் நேரடியாக நடவடிக்கை எடுத்து வருவதுடன் அதற்காக அப்பிரிவின் தலைவரும் பங்குபற்றியுள்ளார். இச்செயற்திட்டத்தின் கண்டுபிடிப்புக்கள் மாணவர்களுக்கு தெரியப்படுத்துவதற்காக ஈடுபடுத்தப்படும். பாடசாலைகளில் ஆசிரியர்களின் கையேற்றிற்காக இச்செயற்திட்டத்தினை கண்டுபிடிப்புக்கள் | ஆராய்ச்சியின் பெறுபேறுகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதன் மூலம் நாட்டிற்கு நலன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் செயற்திட்டங்களைத் திட்டமிடுதல் மற்றும் மேற்பார்வை செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மேற்கூறிய ஆராய்ச்சியின் மூலம் எதிர்பார்த்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | மாணவர்களுக்கு தெரியப்படுத்துவதற்காக ஈடுபடுத்தப்படுவதுடன் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு எங்கள் செயற்திட்டத்தின் ஆராய்ச்சியாளர்களுடன் டெங்கு பரவுவதனைக் குறைப்பதற்காக கம்பஹா மாவட்டத்தில் முன்னோடி செயற்திட்டத்தை மேற்கொள்வதுடன் அதற்காக அப்பிரிவின் பணிப்பாளர் பங்குபற்றுவார். | |
| (இ) | வுழ-14-05 ஆராய்ச்சி செயற்திட்டத்தின் மூலம் ரூபா 47,001,209 தொகை செலவு செய்து ஆழமாகப் பதிந்துள்ள சிறுநீரக நோய் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் பெறுபேறாக சிறுநீரக நோய் தோன்றுவதற்கு காரணம் குடிநீரில் புளோரைட் கல்சியம், மெக்னீசியம் ஆகிய சேர்மானங்கள் உள்ளடங்கியிருந்தமை பற்றி கண்டுபிடிக்கப்பட்டிருந்தும் அச்சேர்மானங்கள் குடிநீரில் உள்ளடங்குவதனைத் தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக நிறுவனங்களைத் தொடர்புகொள்தல் முறைப்படி இடம்பெறாமையின் காரணமாக ஆராய்ச்சியின் பெறுபேறுகள் தேசிய தேவைப்பாட்டிற்கு ஈடுபடுத்துதலானது தாமதமடைந்து அல்லது தவிர்க்கப்பட்டிருந்தது எனவும் அது தொடர்பான | வுழ 14-05 செயற்திட்டத்தின் தொடக்க கண்டுபிடிப்பானது நிறுநீரக நோய்க்காக கல்சியம் அல்லது மெக்னீசியத்துடன் புளோரைட் நீரில் காணப்படுவதுடன் அது பற்றி சுகாதார அமைச்சிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் இச்செயற்திட்டத்தின் கண்டுபிடிப்புக்களை கண்டி பெரிய வைத்தியசாலையின் சிறுநீரகப் பிரிவு தற்பொழுது பயன்படுத்துவதுடன் வடமத்திய மாகாணத்தின் சிறுநீரக நோய்க்கு காரணமாகிய சுத்தமான நீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்காக எங்களின் வுழ 16-15 செயற்திட்டமானது தேசிய நீர் வளங்கள் சபையுடன் இணைந்து தற்பொழுது நடவடிக்கை எடுத்துவருவதுடன் அவர்கள் தற்பொழுது சில நீர்சுத்திகரிப்புக்களைத் தயாரித்து பயன்பாட்டிற்கு | ஆராய்ச்சியின் பெறுபேறுகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதன் மூலம் நாட்டிற்கு நலன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் செயற்திட்டங்களைத் திட்டமிடுதல் மற்றும் மேற்பார்வை செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக தேசிய ஆராய்ச்சி சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | வழங்கியுள்ளனர். சந்தையிலுள்ள நீர் வடிகட்டும் சாதனத்திற்குப் பதிலாக இந்த நோய்க்கு பொருத்தமான நீர் வடிகட்டி சாதனத்தை நிர்மானித்தல் வுழ 16-18 செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. இசசெயற்திட்டத்தின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட உயிரியல் புள்ளிகள் (டீழைஅயசமநசள) கண்டி பெரிய வைத்திய சாலையின் பணிப்பாளரினால் ஒரு கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (ஈ) | ஆராய்ச்சி செயற்திட்டம் இலக்கம் வுழு - 14-10 இன் மூலம் ரூபா 41,723,915 செலவு செய்து பால் உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு அடைவதற்கான ஆராய்ச்சி 2020 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் ஆராய்ச்சியின் மூலம் இனங்காணப்பட்ட தொழில்நுட்பத்தை நடைமுறையில் பயன்படுத்துவதுவது தொடர்பான செயல் முன்னேற்றத்தினை மேற்பார்வை செய்தல் மற்றும் பின்தொடர் நடவடிக்கை எடுத்தலினை நிறுவனம் மேற்கொண்டிருக்கவில்லை. தற்பொழுது இலங்கைக்கு பால் உற்பத்தியில் தன்னிறைவு நிலையை அடையும் குறிக்கோளும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | வுழ -14-10 செயற்திட்டத்தின் தொடக்க குறிக்கோளானது பாலிலில் தன்னிறைவு அடைந்த ஒரு நாடாக உருவாகுவதற்காக செயற்பட வேண்டியவைகளை சிபாரிசு செய்வது என்பதுடன் அவர்கள் தமது செயற்திட்டத்தின் மூலம் அதனை நிறைவேற்றியுள்ளதுடன் செயற்திட்டம் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் பண்ணைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இச் செயற்திட்டத்தின் செயல் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களுக்காக (ீசழபசநள சுநஎநைற ஆநநவபைெ) தேசிய கால் நடை உற்பத்தி மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில் அமைச்சின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்ததுடன் அது பற்றி அவர்களுக்கு | ஆராய்ச்சியின் பெறுபேறுகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதன் மூலம் நாட்டிற்கு நலன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் செயற்திட்டங்களைத் திட்டமிடுதல் மற்றும் மேற்பார்வை செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தெரியப்படுத்தப்பட்டது. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் ஒரு கடிதத்தின் மூலம் இச்செயற்திட்டத்தின் கண்டு பிடிப்புக்களை மக்களுக்கு மத்தியில் பிரபல்யப்படுத்தி பாலிலிருந்து தன்னிறைவு அடைந்த ஒரு நாடாக உருவாக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதுஎனத் தெரிவிக்கப்பட்டது. தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் ரிதிகம பண்ணையில் பசுக்களின் இனவிருத்திக்காக இச்செயற்திட்டத்தின் கண்டுபிடிப்புக்கள் பயன்படுத்தப்படுவதுடன் அதற்காக செயற்திட்டத்தின் ஆராய்ச்சியாளர்கள் பங்குபற்றியுள்ளார்கள். | |
| (உ) | இலங்கையின் பல்வேறு வானிலை நிலைமைகளுக்கு பொருந்தும் பயிர் வகைகளையும் பயிர்ச்செய்கை பண்ணும் நுட்பமுறைமைகளையும் மேம்படுத்துவதனூடாக உணவுப் பாதுகாப்பினை சான்றுபடுத்துவதற்காக பரீட்சார்த்த வெளிக்கள பயிர்களை ஆராய்ச்சி செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் ஆராய்ச்சியின் மூலம் மேம்படுத்தப்பட்ட நெல், சோளம், பாசிப்பயறு, பச்சை மிளகாய் ஆகிய | வுழ 14-24 செயற்திட்டத்தை வெற்றிகரமாகசக பூர்த்திசெய்து இலங்கையில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் அதன் பெறுபேறுகளை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொண்டுள்ளதுடன் விவசாய அமைச்சு தமது உற்பத்திகளை விவசாயிகளுக்கு எடுத்துச் சென்று செயற்திட்டத்தினூடாக தற்பொழுது அமுல்ப்படுத்தப்படுவதுடன் அதற்காக தனியார் நிறுவனத்துடன் இணைந்து நடவடிக்கை எடுத்து | ஆராய்ச்சியின் பெறுபேறுகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதன் மூலம் நாட்டிற்கு நலன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் செயற்திட்டங்களைத் திட்டமிட்டு மேற்பார்வை செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இனங்கள் தொடர்பான பெறுபேற்றினை சமூகமயப்படுத்தல் மற்றும் அதன் செயல்முன்னேற்றத்தை தேசிய ஆராய்ச்சி சபைக்கு பெற்றுக்கொள்ளுதல், மதிப்பீடு செய்தல், பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் என்பன இடம்பெற்றிருக்கவில்லை. | வருகின்றது. அவர்களிடமிருந்து நாங்கள் தற்பொழுது நிகழ்கால செயல் முன்னேற்றத்தை விசாரித்துள்ளோம். | |
| (ஊ) | ஆராய்ச்சிக்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற செலவுகள் முதலீடாக ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் நிறுவனத்தின் கடமையாக இனங்கானப்பட்டிருந்தும் மேற்கூறிய ஆராய்ச்சி செலவுகளை முதலீடாக பயன்படுத்துவதற்கு அல்லது வருமானங்களை உழைப்பதற்கு ஈடுபடுத்தும் முறையான வேலைத்திட்டம் இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | ஆராய்ச்சியாளரினால் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தும் முறைமை தொடர்பாக செயற்திட்ட பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் உரிய செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவது தொடர்பாக அமைச்சுக்களின் உத்தியோகத்தர்கள் செயற்திட்டங்களை மதிப்பீடு செய்வதற்கு பங்குபற்றியுள்ளதுடன் அந்த அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு தற்பொழுது இச்செயற்திட்டம் தொடர்பாக தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் செயற்திட்டங்களின் கண்டுபிடிப்புக்கள் எங்களது நிறுவனத்தின் இணைய தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது. தேசிய ஆராய்ச்சி சபையின் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் சபையின் கடமைகளாவது நாட்டிற்கு பிரயோசனமளிக்க கூடிய செயற்திட்டங்களுக்காக மானியங்களை வழங்குதல், வசதியளித்தல், | ஆராய்ச்சி செலவுகளிலிருந்து உச்ச அளவு நலன்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் ஆராச்சிப் பெறுபேறுகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு முறையான வேலைத் திட்டங்களை உருவாக்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஒருங்கிணைப்பு மேற்பார்வை, ஒழுங்குபடுத்தல் என்பவற்றிற்கு மத்தியில் எங்கள் நிறுவனம் எங்களின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக எங்களால் உச்ச அளவில் முயற்சி எடுக்கப்படுகின்றது. கடந்த ஏப்ரல் 27 ஆந் திகதி எங்கள் நிறுவனம் எங்கள் அமைச்சுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் போது இச்செயற்திட்டம் தொடர்பாக கலந்துரையாடல் இடம்பெற்றதுடன் அதற்காக அமைச்சு சில நடவடிக்கைகள் எடுப்பதாகத் தெரிவித்துள்ளது. | |

3.2 நிதியத்தின் குறைந்த பயன்பாடு

..................................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ........................................... | ................................ | ................. |
| 05 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் எடுக்கும் இலக்குகளை அடிப்படையாகக் கொண்ட பல விடயம் சார்ந்த ஆராய்ச்சிகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவுகள் இடம்பெறும் கால அட்டவணையை இனங்காணல் மற்றும் அதற்கிணங்க கட்டுநிதி தேவைப்பாட்டிற்கான திட்டங்களைத் தயாரித்து நிதி ஏற்பாட்டினைப் பெற்று ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 2021 திசெம்பர் 31 ஆந் | 05 ஆண்டுகளுக்காக வழங்கப்படுகின்ற இலக்கிடப்பட்ட பல்நோக்கு ஆராய்ச்சி மானியங்களுக்காக எங்களின் வழிகாட்டிகளின் மூலம் அவர்களுக்கு ஆண்டின் பொருத்தமான காலத்தில் பொருத்தமான வகையில் பணத்தை ஈடுபடுத்தி ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளது. இதனை பயன்படுத்தாத காலமாக குறிப்பிடுதல் பிழையானதாக உள்ளதுடன் அச்செயற்திட்டங்கள் அனைத்தும் இன்னும் | ஆராய்ச்சிகளுக்காக கிடைக்கின்ற பணத்திலிருந்து உச்ச அளவு விளைதிறன் கிடைக்கும் வகையில் நிதியத்தை தோற்றுவித்தல் போன்ற நடைமுறைக்கு ஈடுபடுதல் வேண்டும். |

திகதியளவில் 03 ஆண்டுகளிலிருந்து 07 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குள் பயன்படுத்தப்படாத ரூபா 64,306,587 மொத்த தொகை (05 ஆராய்ச்சிகளுக்குரியவை) நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்டன.

இடம்பெற்று வருகின்ற செயற்திட்டங்களுக்காக அப்பணம் ஆராய்ச்சியாளர்களால் பயன்படுத்துதலானது ஆராய்ச்சி பிரேரணையில் உள்ள காலப் பகுதிக்குள் இடம்பெறும்.